# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108503

10/2021/AC/CB

1. District : Coimbatore மாவட்டம் PS: V&AC காவல்நிலையம் Year: 2021 ஆண்டு FIR No.: முத.அ. எண் Date: 09.03.2021 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the prevention of Corruption [Amendment] Act 2018. Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 27.02.2021 நாள் முதல் Date to : 04.03.2021 நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : 21.30 hrs நேரம் முதல் Time to : 15.00 hrs நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.03.2021 Time : நேரம் 07.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD VOL-I 09.03.2021 Time : நேரம் 07.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed in tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 8 km South west

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Ponnayarajapuram, Vareity Hall Road Police station, Coimbatore city.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. Sridhar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Thangavel

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35/2021 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Labour of Private Concern (g) Address : முகவரி Door no-637, Anna nagar, Kovaipudhur, Coimbatore - 641042.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) Tr. Irulappan, SI of Police, variety hall Road Police station, Coimbatore City. 2) Tr. Gganesan, SI of Police, variety hall Road Police station, Coimbatore City.

8. Reasons for delay in reporting by the complainant /Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   பாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 09-3-2021

[signature] 09.03.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 09.03.2021 08.45 hrs

Name: பெயர் P. Padmaladevi
Rank: நிலை Inspector of Police No. எண்
VSAC, Coimbatore

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 10/2021/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

09.03.2021-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 7.00 மணிக்கு காவல் ஆய்வாளர் P.பரிமளாதேவி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபொழுது கதவு எண். 637, அண்ணா நகர், கோவைப்புதூர், கோயம்புத்தூர் என்ற முகவரியில் குடியிருக்கும் தங்கவேல் என்பவரது மகன் T.ஸ்ரீதர் என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில், வெரைட்டிஹால் ரோடு போலீஸ் ஸ்டேஷனில் பணிபுரியும் உதவி ஆய்வாளர் இருளப்பன் என்பவர் வாகன தணிக்கையின் போது பிடித்த வாதியின் இரண்டு சக்கர வாகனத்தை வாதியிடம் திருப்பிகொடுப்பதற்காக லஞ்சமாக பணம் ரூ.2,000/-ம் கேட்டிருப்பதும் அந்த லஞ்சப் பணத்தை உதவி ஆய்வாளர் கணேசன் என்பவரிடம் கொடுக்க சொல்லியிருப்பதும், உதவி ஆய்வாளர் திரு.கணேசன் என்பவரும் வாதியிடம் லஞ்சமாக அதே பணம் ரூ.2,000/-த்தை கேட்டிருப்பதும் தெரியவந்தது. மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 09.03.2021-ம் தேதி 07.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.10/2021/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as

amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரிகளான வெரைட்டிஹால் ரோடு போலீஸ் ஸ்டேஷனில் பணிபுரியும் உதவி ஆய்வாளர்கள் திரு.இருளப்பன் மற்றும் திரு.கணேசன் ஆகியோர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், T.ஸ்ரீதர், வயது 35, த/பெ. தங்கவேல், 637, அண்ணா நகர், கோவைப்புதூர், கோவை-641 042 பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கோவை. அய்யா, நான் கோவைப்புதூர், அண்ணா நகரில் எனது மனைவி முத்து பேச்சியம்மாள் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். நான் கோவை காந்திபுரம் 6-வது வீதியல் உள்ள சுவாமி என்வெலப் என்ற கவர் தயாரிக்கும் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். நான் 27.02.2021-ம் தேதி இரவு எனது வேலையை முடித்துவிட்டு என்னுடைய Scooty Pep Plus TN 66 Y 2732 வண்டியில் ஆர்.எஸ்.புரம் அருணாசலம் ரோட்டிலுள்ள என் அப்பாவை பார்த்து விட்டு காந்திபார்க் அருகிலுள்ள சோழா ஹோட்டலின் தென்புற பொன்னையராஜபுரம் சாலையில் எனது வீட்டிற்கு சென்றபோது இரவு சுமார் 9.30 மணியளவில் அங்கு போலீசார் வாகனங்களை செக்செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அங்கிருந்த ஒரு போலீஸ்காரர் என்னுடைய வண்டியை நிறுத்த சொன்னதால் நான் என் வண்டியை நிறுத்தினேன். பின்பு அந்த போலீஸ் எனது வாயை ஊத சொன்னார். நானும் ஊதி காண்பித்தேன். அவர் என்னிடம் நான் குடிபோதையில் இருப்பதாகவும் அதனால் என் வண்டியை ஓரமாக நிறுத்தும்படியும் சொன்னதால் நான் வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டேன். பிறகு அங்கிருந்த ஜீப்பின் அருகில் நின்று கொண்டிருந்த போலீஸ் அதிகாரியை போய் பாருங்கள் என்று சொன்னதால் நான் சென்று அவரை பார்த்தேன். அப்போது அந்த அதிகாரி என்னிடம் தண்ணி அடிச்சிருக்கியா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னேன். உடனே அவர் இங்கேயே பணம் ரூ.3,000/-த்தை கட்டினா கேஸ்போடாம இப்பவே விட்டுவிடுகிறேன், இல்லைன்னா போலிஸ் ஸ்டேஷனுக்கு போனா 6000 ரூபாய் கட்ட வேண்டியிருக்கும் என்று சொன்னார். அப்போது என்னிடம் 500 ரூபாய் மட்டுமே இருந்ததால், என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், பணத்தை ரெடிபண்ணிட்டு அடுத்தநாள் வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி என்று தலையை அசைத்து

விட்டு பணம் இல்லாமல் வண்டியை தர முடியாது என்று சொல்லி எனது வண்டியை வாங்கி வைத்து கொண்டார். பின்னர் என்னுடைய பெயர் விலாசம் மற்றும் செல்போன் நம்பரை கேட்டார். நான் R.S.புரம், கோவை மேற்கு, மேதவர் காலனி, அருணாசலம் ரோட்டில் கதவு எண் 29-லிலுள்ள எனது அப்பாவின் வீட்டு முகவரியை சொன்னேன், அதை பேப்பரில் எழுதி அதில் என் கையெழுத்தை வாங்கி கொண்டு வெரைட்டி ஹால் ரோடு போலீஸ் ஸ்டேசன் வந்து பணத்தை கொடுத்துட்டு வண்டிய வாங்கிக்கொள் என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார்கள். அந்த அதிகாரியின் பெயர் எஸ்.ஐ இருளப்பன் என்பதை அவரது யூனிபார்மிலிருந்த நேம் பிளேட்டை பார்த்து தெரிந்துகொண்டேன். அதன் பின்னர் எனது வேலையின் காரணமாக இரண்டு நாட்களாக எனது வண்டியை வாங்க ஸ்டேசனுக்கு செல்ல முடியவில்லை. அதனால் 03.03.2021-ம் தேதி மதியம் சுமார் 12 மணியளவில் எனது வண்டியை வாங்க நானும் எனது மனைவி முத்து பேச்சியம்மாளும் வெரைட்டிஹால் ரோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்றோம். அங்கிருந்த கணேசன் என்ற எஸ்.ஐ எங்களிடம் என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் என்னோட வண்டியை சனிக்கிழமை இரவு குடிபோதையில் வண்டியை ஓட்டியதாக இருளப்பன் எஸ்.ஐ எனது வண்டியை வாங்கி வைத்துக்கொண்டார் அதனால் அவரை பார்த்து வண்டியை வாங்கிட்டு போலாம்னு வந்தோம் என்றும் கூறினேன். என்னிடம் எந்த வண்டி என்று விபரம் கேட்டார். நான் வண்டியை பிடித்த விபரம் சொன்னேன். அவர் எனது பெயர் மற்றும் விலாசத்தை கேட்டு விட்டு ஆமாப்பா இருளப்பன் எஸ்.ஐ சொல்லியிருக்கறாறு என்று சொல்லி, உடனே டேபிளில் இருந்த, எனது வண்டியை பிடித்தபோது எழுதப்பட்ட எனது விவரங்கள் அடங்கிய பேப்பரை எடுத்து சரிபார்த்துவிட்டு, எனது வண்டியின் நம்பரை கேட்டார். நான் வண்டி எண் TN 66 Y 2732 Scooty Pep plus என்று சொன்னேன். தண்ணி அடித்துவிட்டு வண்டி ஓட்டுனா எவ்வளவு பைனுன்னு தெரியுமா, பைன கேட்டு தலைய சுத்தி விழுந்திடாதீங்க உட்காருங்க சொல்றேன் என்று சொன்னார். உடனே அந்த எஸ்.ஐ.க்கு அருகில் இருந்த போலீஸ்காரர் ஒருவர் என்னிடம் குடிபோதையில் வண்டியை ஓட்டினால் கோர்ட்டுக்கு போனால் எவ்வளவு பைன் கட்டனும்னு தெரியுமா 14,000/- ரூபாய் ஆகும் என்று சொன்னபோது, அங்கிருந்த கணேசன் எஸ்.ஐ அவரே சொல்லிட்டாரு தெரிஞ்சுக்கோ என்று

சொன்னார். நான் அவரிடம் வண்டி இல்லாம எனக்கு வேலைக்கு போறதுக்கு ரொம்ப கஷ்டமா இருக்குதுங்க சார் என்றும், பைன் எவ்வளவுன்னு சொன்னீங்கன்னா நான் கட்டிட்டு வண்டியை எடுத்துகிட்டு போறேன் என்றும் சொன்னேன். கவலைப்படாதிங்க உங்க வண்டி எங்ககிட்டதான் இருக்குது என்று சொல்லி, வண்டியை எடுத்துக்கலாம்னும், வண்டிய பிடிச்ச அந்த அதிகாரி எவ்வளவு கொடுக்க சொன்னாங்கன்னு கேட்டார். அதற்கு நான் அவர் 3,000/- கேட்டாருங்க சார் நீங்க கொஞ்சம் கம்மிபண்ணுங்க சார் என்று கேட்டபோது, கணேசன் எஸ்.ஐ ஒரு 2000 ரூபாய் கொடுத்தா கேஸ் எதுவும் போடாம நீ இப்பவே உன் வண்டியை எடுத்துக்கிட்டு போயிடலாம்னு சொன்னார். நான் என்னிடம் இப்போ அவ்வளவு பணம் இல்லைன்னு சொன்னேன். அதற்கு அவர் 2000 ரூபாய் பணத்தோட வாங்க என்று கறாராக சொல்லிவிட்டார். பணத்தை ரெடிபண்ணிட்டு வரேன் சார் என்று சொல்லிவிட்டு நாங்க கிளம்பிட்டோம். 04.03.2021-ம் தேதி மதியம் சுமார் 3 மணியளவில் நான் என் அப்பாவின் வீட்டிற்கு போய்க்கொண்டிருந்த போது எனது வண்டியை பிடித்து வைத்துக்கொண்ட எஸ்.ஐ இருளப்பன் அவர்கள் பொன்னையராஜபுரம் போலிஸ் அவுட் போஸ்ட் அருகில் வண்டிகளை செக் செய்துகொண்டிருந்தார். நான் ஸ்டேசன் போன விசயத்தை அவரிடம் சொல்லாமலேயே பணம் எதுவும் கொடுக்காமல் வண்டியை கேட்டுப்பார்க்கலாம் என்று நினைத்து, நான் அவரிடம் சென்று எனது வண்டியை திருப்பி கொடுக்கும்படி கேட்டேன். அவர் 3000 ரூபாய் கொடுத்துட்டு வண்டியை வாங்கிக்க என்று சொன்னார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் கொஞ்சம் குறைச்சுக்கோங்க சார்ன்னு கேட்டேன். அதற்கு அவர் பணம் கொடுக்காமல் வண்டியை தரமுடியாது என்றும் சரி சரி நீ 2000 ரூபாய் பணத்தை கொடுத்துடு, கேஸ் ஏதும் போடல நீ வண்டியை எடுத்துட்டு போ என்று சொல்லிவிட்டார். இவரும் கணேசன் எஸ்.ஐ கேட்ட மாதிரியே 2000 ரூபாய் கேட்டார். சார் என் வண்டி எங்க என்று கேட்டேன். அவர் பார்க்கிங்கல போட்டு வச்சிருக்கேன் என்று சொன்னார். என்கிட்ட பணம் இல்லைன்னும், பணம் ரெடி பண்ணிட்டு வரேன்னு சொன்னேன். சரி பணத்தை ரெடிபண்ணிட்டு வெரைட்டிஹால் ரோடு போலிஸ் ஸ்டேசன்ல கணேசன் எஸ்.ஐக்கிட்ட கொடுத்துட்டு வண்டியை வாங்கிக்க என்று சொல்லி விட்டார். நானும்

வேறு வழி தெரியாமல் சரின்னு சொல்லிட்டு கிளம்பிவிட்டேன். வண்டியை பிடிச்சது சம்மந்தமா எனக்கு நோட்டீஸ் எதுவும் கொடுக்கவில்லை, அதேபோல் நான் மது குடித்ததற்கான டாக்டர் டெஸ்ட் எதுவும் எடுக்கவில்லை. எனக்கு சொந்த வேலையிருந்ததாலும், என் கையில் பணம் இல்லாததாலும் வண்டியை வாங்க ஸ்டேசனுக்கு செல்ல முடியவில்லை. நான் எனது மனைவியுடன் கலந்து பேசி யோசித்து பார்த்ததில் எனது வண்டியை திருப்பி வாங்க வெரைட்டிஹால் ரோடு போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ.க்கள் இருளப்பன் மற்றும் கணேசன் ஆகியோர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூபாய் 2000-த்தை கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட வெரைட்டி ஹால் ரோடு போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ. இருளப்பன் மற்றும் எஸ்.ஐ. கணேசன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-(xxxx)09.3.2021 இடம்: கோவை நாள்: 09.03.2021. Respected Sir, Received the complaint on 09.03.2021 at about 07.00 hrs sd/-(xxxx) 09.03.2021 (P.Parimaladevi), Inspr. of Police, V&AC, Coimbatore. Respected Sir, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.10/2021/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 09.03.2021 at 07.45 hrs sd/-(xxxx) 09.03.2021 (P.Parimaladevi), Inspr. of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

09.03.2021

(P. பரிமளாதேவி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.